ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2499/09 - 2026 ජූලි මස 27 වැනි සඳුදා - 2026.07.27

2499/09 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

(முத்திரை)

**அநுர குமார திசாநாயக்க**

**சனாதிபதியின் பணிப்புரை**

1. கௌரவ வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்
2. கௌரவ சுற்றுலா பிரதி அமைச்சர்
3. சனாதிபதியின் செயலாளர்
4. செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
5. செயலாளர், பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
6. செயலாளர், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
7. செயலாளர், சுற்றாடல் அமைச்சு
8. செயலாளர், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
9. செயலாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
10. மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), சுற்றுலாப் பிரிவு, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
11. தலைவர், நகர அபிவிருத்தி அதிகாரசபை
12. தலைவர், இலங்கை அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
13. தலைவர், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இலங்கை மாநாட்டுப் பணியகம்
14. பணிப்பாளர் நாயகம், மத்திய கலாசார நிதியம்
15. பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்
16. பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம்
17. பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
18. பணிப்பாளர் நாயகம், வனப் பாதுகாப்புத் திணைக்களம்

1A - G 47396 — 354 (2026/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

19. பணிப்பாளர் நாயகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
20. குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்
21. பணிப்பாளர் நாயகம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை
22. பொலிஸ் மாஅதிபர், இலங்கைப் பொலிஸ்
23. திரு. துமிந்த ஹுலங்கமுவ அவர்கள்
24. திரு. கிரிஷான் பாலேந்திர அவர்கள்
25. திரு. நிஹால் முகந்திரம் அவர்கள்
26. திரு. நலின் ஜயசுந்தர அவர்கள்
27. திரு. சுரஞ்சித் வேவிட்ட அவர்கள்
28. திருமதி. ஷிரோமால் குரே அவர்கள்

ஆகியோருக்கு,
வாழ்த்துக்கள்!

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதிய சனாதிபதி பணிப்புரையின் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கையின் சுற்றுலா அபிவிருத்திப் பணி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக தாங்கள் நியமிக்கப்பட்டுள்ளமையினாலும்,

மேலும், மேற்குறித்த செயலணியின் உறுப்பினர் ஒருவராக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தபோதிலும், தற்போது அந்த அமைச்சின் விடய எல்லை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு என இரண்டு அமைச்சுகளின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த செயலணியின் உறுப்பினர்களாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ஆகியோர் நியமிக்கப்பட வேண்டும் என என்னால் கருதப்படுகின்றமையினாலும்,

மேலும், சுற்றுலாத்துறையின் மேம்பாட்டின் பொருட்டு சாதகமான கடமைப்பொறுப்பை நிறைவேற்றிவரும் இலங்கை ஹோட்டல் சங்கத்தின் பிரதிநிதித்துவத்தையும் இந்தச் செயலணிக்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என என்னால் கருதப்படுகின்றமையினாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளை, அவர்களது விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின் மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும்கொண்டு, மேற்குறித்த சனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கையின் சுற்றுலா அபிவிருத்திப் பணி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக இத்தால் நியமிக்கிறேன்.

01. செயலாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு
02. செயலாளர், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
03. தலைவர், இலங்கை ஹோட்டல் சங்கம்

இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு ஜுலை மாதம் 24 ஆம் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

கௌரவ சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

கலாநிதி **என். எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்

EOG 07 - 0389

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*